பக்கங்கள் 18+5

# மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | ஆவணி 29 சனிக்கிழமை 14.09.2024 | அதிர்வு 44

## தரம் 5 இற்கான புலமைப்பரிசில் பரீட்சை நாளை

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குச் சகல ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன என்று பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. 04

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



### யாழ். நாவாந்துறையில் மக்கள் முன்னிலையில் ரணில் தெரிவிப்பு

# சஜித் அல்லது அநுரகுமாரவிடம் வடக்குக்கான தீர்வு கிடையாது!

**அரசியல் பிரச்சினைக்கு மட்டுமன்றி அபிவிருத்திப் பிரச்சினைக்கும் தீர்வு வழங்குவேன்**

(எஸ்.நிதர்ஷன்)

- தேசிய காணி ஆணைக்குழு மற்றும் உண்மை நல்லிணக்க ஆணைக்குழு நிறுவப்படும்
- காணாமல்போனோரின் பிரச்சினைக்கு அடுத்த 5 வருடங்களில் முழுமையான தீர்வு
- மாகாண சபைகளுக்கு எதிராக அநுரகுமார தெற்கில் பெரும் போராட்டம் முன்னெடுத்தார்
- தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் நம்பிக்கை இழந்திருந்தபோது அனைவருக்கும் எதிர்பார்ப்பை அளித்தது நான்தான்.
- ஐ.எம்.எப். திட்டத்தை தொடராவிட்டால் நாட்டின் பொருளாதாரம் மீண்டும் வீழ்ச்சியடையக்கூடும் என்று ஐ.எம்.எப். எச்சரித்துள்ளது. 07

# ரணிலை நிராகரித்து மற்றவர்களுக்கு வாக்களித்தால் அநுரவுக்கே சாதகமாம்

### இப்படி எச்சரிக்கின்றார் அமைச்சர் அலி சப்ரி

“இன்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் அநுரகுமார திஸாநாயக்கவும் மாத்திரமே பிரதான வேட்பாளர்களாக உள்ளனர். வேறு எவருக்கு வாக்களித்தாலும் அது அநுரகுமாரவுக்குச் சாதகமாக அமையும். எனவே, ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவை நிராகரித்து மற்றைய வேட்பாளர்களுக்கு வாக்களிக்காதீர்கள்.

– இவ்வாறு அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

பேருவளை கடற்கரை விளையாட்டரங்கில் நேற்று வெள்ளிக்கிழமை பிற்பகல் ‘ரணிலால் முடியும்’ வெற்றிப் பேரணி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அலி சப்ரி மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

“நாடு இன்று நல்ல நிலைமையில் இருக்கின்றது. இந்தப் பயணத்தை மாற்ற வேண்டுமா என்பதை மக்கள் தீர்மானிக்க வேண்டும்.

கிறீஸிலும் இதேபோன்று பொதுவுடமை மாற்றம் வேண்டும் என்று சிலர் வந்தனர். அங்கிருந்து சர்வதேச 04





# யாழ். நாவாந்துறையில் ரணிலின் பிரசாரம்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் – நாவாந்துறை சென் மேரிஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இன்று சனிக்கிழமை “ரணிலால் இயலும்” என்ற தொனிப்பொருளில் பிரசாரக் கூட்டம் நடைபெற்றது.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட பலரும் உரையாற்றினர்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றியை உறுதிப்படுத்தும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த நிகழ்வில் பெருந்திரளான மக்கள் கலந்துகொண்டனர்.



















# நான் ஜனாதிபதியானால் வடக்கு, கிழக்குக்கு பொலிஸ், காணி அதிகாரம் வழங்கமாட்டேன்!

## சரத் பொன்சேகா கூறுகின்றார்



"நான் ஜனாதிபதியானால் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்குப் பொலிஸ் மற்றும் காணி அதிகாரம் வழங்க மாட்டேன்."

– இவ்வாறு எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் சுயாதீன வேட்பாளர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:-

"இலங்கை, இந்திய ஒப்பந்தத்துக்கு தெற்கு மக்களின் ஆசிர்வாதம் இருக்கவில்லை. அது பலவந்தமாகத் திணிக்கப்பட்டதொன்றாகும். அதனால்தான் வடக்கு - கிழக்கு இணைப்பு, பொலிஸ் மற்றும் காணி அதிகாரம் என்பன நடைமுறைப்படுத்தப்படவில்லை.

குறித்த ஒப்பந்தம் அமுலாக்கப்பட்ட விதத்தை நானும் அனுமதிக்கவில்லை. ஒப்பந்தம் வந்தபோது நான் இராணுவத்தில் இருந்தேன். ஒப்பந்தம் பலவந்தமாகத் திணிக்கப்பட்டதை ஏற்க முடியாது.

13 வழங்கப்படும் எனச் சஜித் கூறுகின்றார். அதேபோல் ஐக்கியமான நாடு பற்றி சஜித் மற்றும் அநுர ஆகியோர் கதைக்கின்றனர். ஆனால், ஒற்றையாட்சி எனும் நிலைப்பாட்டிலேயே நான் உள்ளேன். நான் ஜனாதிபதியாகும் பட்சத்தில் மாகாணங்களுக்குப் பொலிஸ், காணி அதிகாரங்களை வழங்கமாட்டேன்.

ஆனால், 13 ஐ விடவும் அதிகாரங்களைப் பகிர்ந்து மக்கள் சமத்துவத்துடன் வாழக்கூடிய சூழ்நிலையை உருவாக்கலாம். அவ்வாறானதொரு நிலை ஏற்படும் வரை மேற்படி அதிகாரங்களை வழங்க முடியாது." – என்றார்.

# ரணிலுடன் இன்னும் ஐந்து வருடங்களுக்கு இந்நாடு முன்னோக்கிச் செல்ல வேண்டும்!

## தேசிய பாதுகாப்பு ஆலோசகர் வலியுறுத்து




ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் இன்னும் ஐந்து வருடங்களுக்கு இந்த நாடு முன்னோக்கிச் செல்ல வேண்டும் என்று தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சாகல ரத்நாயக்க தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

"கொவிட் காலத்தில் அப்போதைய அரசு வரிச் சுமைகளைக் குறைத்தமையின் காரணமாகவே இலங்கை நெருக்கடிக்குள் சிக்கியது. அதேபோல் இரசாயன உர இறக்குமதிக்குத் தடை விதித்தமையினால் இலங்கையின் விவசாய உற்பத்திகள் முற்றாகச் சரிவைக் கண்டன. அதனால் புதிய வகையிலான விளைச்சல்களை கண்டுபிடிப்பதற்கான முயற்சிகளும் பாதிப்பை எதிர்கொண்டன.

அந்தநிலையிலிருந்து மீளவே நாம் சர்வதேச நாணய நிதியத்துடன் பயணிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அதனாலேயே நாட்டின் அத்தியாவசியப் பொருட்களின் தட்டுப்பாடுகளிலிருந்து மீண்டு வர முடிந்தது. குறிப்பாக சர்வதேச நாடுகள் மத்தியில் இலங்கை மீதான நம்பிக்கை ஏற்பட்டது. அதனால் சுற்றுலாத்துறையும் மூச்சுவிட ஆரம்பித்தது.

அதனால் அப்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் மேற்கொள்ளப்பட்ட நிதி முகாமைத்துவம் உள்ளிட்டச் செயற்பாடுகள் தேசிய பொருளாதாரத்தை நிலைப்படுத்தியிருந்தது. அதன்படி இப்போது துரித அபிவிருத்திக்கான வேலைத்திட்டம் அவசியப்படுகின்றது. இந்த வருடத்தின் இறுதியில் சுற்றுலாப் பயணிகள் வருகையை 25 இலட்சமாக அதிகரிப்பதற்கான வேலைத்திட்டத்தை ஜனாதிபதி தயாரித்திருக்கின்றார்.

அதேபோல் எமது இறக்குமதிகளுக்குச் செலுத்தவே வருமானம் போதுமாக இருப்பதால் ஏற்றுமதி பொருளாதாரத்தை உருவாக்கி அதிக வருமானத்தை ஈட்டும் திட்டங்களையும் அவர் தயார்படுத்தியுள்ளார். தற்போதும் இலங்கை பல நாடுகளுடன் சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்களில் கைசாத்திட்டுள்ளது. மேலும் மீள் புதுப்பிக்கக்கூடிய வலுசக்தி உற்பத்தியை ஆரம்பித்துள்ளோம். இவற்றை முன்னோக்கிக் கொண்டு செல்லக்கூடிய ஒரே தலைவராக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மட்டுமே இருப்பதாலேயே அவரோடு இன்னும் ஐந்து வருடங்களுக்கு இந்த நாடு முன்னோக்கிச் செல்ல வேண்டும் என்று வலியுறுத்துகின்றோம்." – என்றார்.

# ஒற்றையாட்சியைப் பாதுகாப்பதற்குரிய உத்தரவாதத்தை சஜித் வழங்கவில்லை

## நாமல் அதில் உறுதி என்கிறது மொட்டுக் கட்சி




"ஒற்றையாட்சியைப் பாதுகாப்பதற்குரிய உத்தரவாதத்தை ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ வழங்கவில்லை. மாறாக அவர் ஐக்கிய இலங்கை தொடர்பிலேயே பேசி வருகின்றார். ஆனால், ஒற்றையாட்சியைப் பாதுகாப்பதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படுவேன் என மொட்டுக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ உறுதியளித்துள்ளார். அத்துடன், அரசமைப்பில் 13 ஆவது திருத்தச் சட்டத்தில் உள்ள பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்கள் வழங்கப்படமாட்டாது எனவும் நாமல் ராஜபக்ஷ தெளிவாக கூறியுள்ளார்."

– இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் எம்.பி.தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:-

"உலகில் ஒற்றையாட்சியுடைய நாடுகள் உள்ளன, ஐக்கிய நாடுகள் உள்ளன. ஐக்கிய அரசு இராஜ்ஜியத்தை எடுத்துக்கொண்டால் மூன்று நாடுகள் இணைந்து உருவாக்கப்பட்டதொன்றாகும். எந்நேரத்தில் வேண்டுமானாலும் அந்நாடுகளால் பிரிந்து செல்ல முடியும். ஐக்கிய இராஜ்ஜியம் என்பது அப்படிதான். 28 நாடுகள் இணைந்து உருவாக்கப்பட்டது. இதைத்தான் ஐக்கிய நாடு என்பது.

சஜித் பிரேமதாஸ கடந்த காலங்களில் ஐக்கிய இலங்கை தொடர்பிலேயே பேசி வருகின்றார். அவரின் தேர்தல் விஞ்ஞாபனத்தில்கூட ஒற்றையாட்சி பற்றி குறிப்பிடப்படவில்லை. 13 இற்கு அப்பால் சென்று அதிகாரம் பகிரப்படும் எனக் கூறப்பட்டுள்ளது.

வடக்கு மக்களுக்கு ஒன்றையும், தெற்கு மக்களுக்கு வேறொன்றையும் கூறி மக்களை ஏமாற்றும் அரசியலை ஐக்கிய மக்கள் சக்தி நடத்தி வருகின்றது." – என்றார்.

# வவுனியாவில் 15 வயது சிறுமி துஷ்பிரயோகம்

## தந்தை கைது; இளைஞர் ஒருவருக்கும் வலைவீச்சு

**(கே.வசந்தன்)**

வவுனியா, ஓமந்தை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் 15 வயது சிறுமி ஒருவர் அவரின் தந்தை மற்றும் இளைஞர் ஒருவரால் துஷ்பிரயோகம் செய்யப்பட்டுள்ளார். இதையடுத்து சிறுமியின் தந்தை இன்று சனிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார் என்று ஓமந்தைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வவுனியா, ஓமந்தை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சிரேஷ்ட பொலிஸ் பரிசோதகர் ஜெயதிலகவுக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்துப் பாதிக்கப்பட்ட 15 வயது சிறுமியை மீட்ட பொலிஸார் அந்தச் சிறுமியிடம் வாக்குமூலங்களைப் பதிவு செய்த பின்னர், அவரை வைத்திய பரிசோதனைக்கு அனுப்பிய நிலையில் சிறுமி துஷ்பிரயோகம் செய்யப்பட்டுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

விசாரணைகளின்போது கடந்த 2022 ஆம் ஆண்டு முதல் மேற்படி சிறுமியை அவரின் தந்தை துஷ்பிரயோகம் செய்தமை தெரியவந்துள்ளது. அத்துடன் அந்தச் சிறுமியின் வீட்டில் தங்கியிருந்த இளைஞர் ஒருவரும் கடந்த மாதம் 28 ஆம் திகதி சிறுமியைத் துஷ்பிரயோகம் செய்துள்ளார் என்றும் பாதிக்கப்பட்ட சிறுமி பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து சிறுமியின் தந்தை கைது செய்யப்பட்டுள்ளார் என்றும், இளைஞரைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்றும் ஓமந்தைப் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இதேவேளை, மேற்படி தந்தை தனது மூத்த மகளை 2020 ஆம் ஆண்டு துஷ்பிரயோகம் செய்தமையையடுத்து கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்ட நிலையில் அது தொடர்பான வழக்கு விசாரணை வவுனியா மேல் நீதிமன்றத்தில் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**ரணிலை நிராகரித்து...**

நாணய நிதியத்தைத் திருப்பி அனுப்பிவிட்டனர். அதன்பின்னர், அந்த நாட்டு மக்கள் கடுமையான நெருக்கடிகளை எதிர்கொண்டனர். அவ்வாறான நிலைக்கு நாமும் செல்ல வேண்டுமா?

இலங்கையில் இன்று வடக்கு – கிழக்கு தமிழ் மக்களும், மலையகத் தமிழ் மக்களும், கொழும்பு மக்களும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடனேயே உள்ளனர். எனவே, ஜனாதிபதி ரணிலின் வெற்றி தற்போது உறுதியாகியுள்ளது." – என்றார்.

---

**தரம் 5...**

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது. இதில் இம்முறை 3 இலட்சத்து 23 ஆயிரத்து 879 பரீட்சார்த்திகள் தோற்றவுள்ளனர்.

தமிழ்ப் பிரிவில் 79 ஆயிரம் பரீட்சார்த்திகள் பரீட்சைக்குத் தோற்றவுள்ளனர் என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் குறிப்பிட்டுள்ளார்.

நாடு முழுவதும் 2 ஆயிரத்து 849 பரீட்சை நிலையங்கள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன. நாளை காலை 9 மணிக்கு முன்னர் பரீட்சை நிலையத்துக்குச் சமுகமளிக்க வேண்டும் என்று மாணவ, மாணவிகளுக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

பரீட்சை நிலையத்துக்குள் வெளியாட்கள் பிரவேசிக்க இடமளிக்கப்படமாட்டாது என்பதுடன் பரீட்சைக்குத் தேவையான பேனா, பென்சில் மாத்திரமே பரீட்சார்த்திகள் எடுத்துச் செல்ல முடியும்.

# கையிலிருக்கும் கிளியை விட்டுவிட்டு மரத்திலிருக்கும் குருவியைப் பிடிக்க முயலாதீர்கள் என்கின்றார் ஹரின்




"சரியான தீர்மானத்தை எடுக்கா விட்டால், இருள் யுகத்தில் வாழ வேண்டும் என்பதை மறக்காமல் மக்கள் வாக்களிக்க வேண்டும். எனவே, கையிலிருக்கும் கிளியை விட்டுவிட்டு மரத்திலிருக்கும் குருவியைப் பிடிக்கச் சென்றால் இரண்டும் கிடைக்காது என்பதை மக்கள் நினைவில்கொள்ள வேண்டும்."

– இவ்வாறு முன்னாள் அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

பேருவளை கடற்கரை விளையாட்டரங்கில் நேற்று வெள்ளிக்கிழமை பிற்பகல் நடைபெற்ற "ரணிலால் முடியும்" வெற்றிப் பேரணியில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் உரையாற்றுகையில், "இன்று இருக்கும் நிலை வேண்டுமா? கஷ்ட காலத்தை நோக்கி மீண்டும் செல்ல வேண்டுமா? என்பதை இன்னும் 8 நாட்களில் தீர்மானிக்க முடியும். இதே இடங்களில் இரண்டு வருடங்களுக்கு முன்பு எத்தனை நாட்கள் வரிசையில் நின்றோம் என்பதை மறக்கக் கூடாது.

பிரச்சினைகளிலிருந்து மீண்டுவரும் வேளையில் வாய்ச்சொல் வீரர்களை நம்பி மாற்றத்தை செய்து பார்க்கச் சிந்திப்பது வேடிக்கையானது. அதேபோல் மக்கள் அந்த நிலைமைகளை மறந்திருப்பது வேதனைக்குரியது.

வெளிநாடுகளில் வேலை செய்யும் 15 இலட்சம் பேர் ஜே.வி.பியின் திசைகாட்டிக்கு வாக்களிக்க வருவார்கள் என்று சொல்கின்றார்கள். அப்படி வருவதாயின் ஒரு நாளைக்கு 5 ஆயிரம் விமானங்களை இலங்கைக்குக் கொண்டு வர வேண்டியிருக்கும். இவ்வாறான பொய்களை மக்கள் நம்புவது கவலைக்குரியது." – என்றார்.

# சிறந்த தலைவரைத் தெரிவு செய்க நாட்டு மக்களுக்கு அரிய சந்தர்ப்பம்

## ரணிலின் பேருவளை பிரசாரத்தில் ராஜித தெரிவிப்பு




இலங்கையில் இப்போது சரியான தலைவர்கள் யார் என்பதைத் தீர்மானிக்க மக்களுக்கு அரிய சந்தர்ப்பம் கிடைத்துள்ளது என்று முன்னாள் அமைச்சரும் களுத்துறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

பேருவளை கடற்கரை விளையாட்டரங்கில் நேற்று வெள்ளிக்கிழமை பிற்பகல் நடைபெற்ற 'ரணிலால் முடியும்' வெற்றிப் பேரணியில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் உரையாற்றுகையில், "ஒருநாள் ஒரு வீட்டில் தீப்பற்றிக் கொண்டது. வீட்டில் உள்ளவர்கள் அச்சத்தில் இருந்தனர். அவர்களை மீட்க எவரும் வரவில்லை. அப்போது ஒரு தலைவர் வந்து தீயை அணைத்தார். பின்னர் வந்த சிலர் வீட்டுக்கு வர்ணம் பூசினர். பின்னர் தீயை அணைத்த வரை அவர்கள் திருடர் என்று சொன்னார்கள்" – என்று புத்த பெருமான் ஒரு போதனையில் சொல்லியிருக்கிறார். அப்படித்தான் இலங்கையின் நிலைமையும் இருந்தது.

ஜனாதிபதி பதவியைத் தட்டில் வைத்து தந்தபோதும்கூட எவரும் நாட்டை ஏற்க முன்வரவில்லை. அப்போது சில காலம் கஷ்டங்களைப் பொறுத்துக்கொள்ளுமாறு மக்களிடம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கோரினார். அரசியல்வாதிகளுக்குப் பொறுமை இருக்கவில்லை. மக்களுக்குப் பொறுமை இருந்தது. எனவே, நாட்டில் இப்போது சரியான தலைவர்கள் யார் என்பதைத் தீர்மானிக்க மக்களுக்கு அரிய சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

கிரீஸ் நாட்டில் ஒரே வருடத்தில் நான்கு ஆட்சிகள் வந்தன. அப்போது அரச ஊழியர்களின் சம்பளம் 50 சதவீதமாக வெட்டப்பட்டது. ஆனால், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மக்களுக்கான எந்த நிவாரணத்திலும் கைவைக்கவில்லை. நாட்டை நெருக்கடியிலிருந்து மீட்க வழிசெய்தார். அதனால் இந்தப் பாதையை மாற்றினால் பாதகமான விளைவுகளை நாடு எதிர்கொள்ளும்.

அடுத்துவரும் தேர்தலை யுத்தம் போல் நினைக்க வேண்டும். அந்த யுத்தத்தில் தோற்றால் நாட்டு மக்கள் பெரும் அழிவுகளுக்கு முகம்கொடுக்க வேண்டியிருக்கும் என்பதை கருத்தில் கொண்டு சரியான தலைவரை தெரிவு செய்ய வேண்டும்." – என்றார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## ஜே.வி.பிக்கு ஆதரவு

இதுவரை காலமும் தனித்து ஒரு கட்சியாக முன்னின்று ஆட்சியையோ, நிர்வாகத்தையோ கொண்டு நடத்தாத தரப்பு ஜே.வி.பி.

முன்னர் ஒரு தடவை திஸ்ஸமாறகம பிரதேச சபையை நிர்வகித்தமையைத் தவிர, மற்றப்படி பெரும்பாலும் எதிரணியில் இருந்து ஆட்சியாளர்களை விமர்சித்து, ஆட்சித் தரப்புகளை கண்டித்து, குற்றம் சுமத்தி வந்ததுதான் அக்கட்சி.

அதற்கு இப்போது திடீரென பெரிய அளவில் ஆதரவு அலை எழுந்திருப்பதாகக் கூறப்படுகின்றது. அதற்கு காரணம் என்ன?

முதலாவது - இதுவரை ஆளும் தரப்புகளாக மாறி மாறி இருந்து வந்த பிரதான கட்சிகள், குழுக்கள் பண்ணி வந்த ஊழல்கள், முறைகேடுகள், நிர்வாகச் சீர்கேடுகள், குழப்பங்கள், குளறுபடிகள் போன்றவற்றை ஒட்டி அவற்றின் மீது மக்களுக்கு ஏற்பட்ட அவநம்பிக்கை, மாற்றான தரப்பு ஒன்றைத் தேடியும் சிந்திக்கவும் அவர்களைத் தூண்டி இருக்கின்றது.

அடுத்தது - கட்சியாக ஒரு கட்டமைப்பு ஒழுங்கில் அது நீண்ட காலம் நேர்சீராக இயங்குகிறது. தனிமனித மேலாதிக்கத்திற்கு அதிகம் இடம் அளிக்காமல், கட்சிக் கட்டமைப்பாகக் கூட்டாக முடிவுகளை எடுத்து அது செயல்படுவது.

மூன்றாவது - உட்கட்சி விவாதங்கள், ஆய்வுகள், கருத்தாடல்கள் மூலம் குறைந்தபட்சம் தன்னை அவ்வப்போது திருத்தி புடம் போட்டுக் கொள்வதாக அக்கட்சி காட்டிக் கொள்வது.

ஒரு காலத்தில் வன்முறை மூலம் - இலங்கை அரசின் விவரணப்படி 'பயங்கரவாதம்' மூலம் - அதிகாரத்தைக் கைப்பற்ற எத்தனித்த ஒரு தரப்பின் பின்னால் மக்கள் இன்று அணி திரளத் தயாராகி இருக்கின்றார்கள் என்றால் அதில் ஏதோ ஒரு விடயம் அடங்கித் தான் உள்ளது.

பிற மிதவாத அரசியல்வாதிகளின் ஊழல், மோசடிகள், கோமாளித்தனங்கள், நிர்வாகச் சீர்கேடுகள், ஜனநாயகவிரோதச் செயற்பாடுகளினால் அதிருப்தியுற்றிருக்கும் மக்களுக்கு, பழைய சரித்திரத்தில் கருப்பு புள்ளி கொண்டை இக்கட்சி, இனியாவது திருந்தி, இந்த ஊழல் அரசியல் வாதிகளிடமிருந்து நாட்டையும் மக்களையும் மீட்டு தர மாட்டாதா என்ற ஆதங்க நிலைப்பாடும் ஒரு காரணமாகும்.

வடக்கு - கிழக்கை பிரிப்பதற்கு முன்நின்று செயலாற்றி, ஒரு காலத்தில் மாகாண அதிகார பரவலாக்கலுக்கு எதிராகவே ஆயுதம் தாங்கிய போராட்டத்தில் ஈடுபட்ட ஜே.வி.பியினரை, அதையெல்லாம் மறந்து, அவற்றையும் தாண்டி, அக்கட்சியை நம்பி, பின்னால் போகக் கணிசமான தமிழர்களே தயாராகி விட்டார்கள்.

இப்படிப் பழையவற்றை மறந்து புது அவதாரம் எடுத்து வரும் ஜே.வி. பினரையும் உள்ளடக்கிய தேசிய மக்கள் சக்தியை நம்பி பயன் உண்டா என்ற கேள்விக்கு எதிர்காலம் தான் பதில் கூற முடியும்.

தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளராக நிற்கும் அநுரகுமார திஸநாயக்க வல்லவராக இருக்கலாம். நல்லவராக இருக்கலாம். தீர்க்கமான முடிவுகளை எடுக்கக் கூடியவராக இருக்கலாம்.

ஆயினும், நிறைவேற்றதிகார ஜனாதிபதியாக அவர் தெரிவாகும் பட்சத்தில் சுதந்திரமாக - சுயாதீனமாக - தனது மனதிற்குப் பட்டதை ஆற்ற கூடியவராக அவர் இருப்பாரா என்பது தான் கேள்வி.

அந்த இடதுசாரி கட்டமைப்பில் கூட்டாக சேர்ந்துதான் தோழர்கள் முடிவு எடுக்க வேண்டும். முடிவெடுக்க முடியும். அத்தகைய ஓர் இயக்கப் பாணிக் கட்டமைப்பிலிருந்து முகிழ்ந்து வரும் ஓர் அரசியல்வாதியால் தனித்துத் தீர்க்கமாக தீர்மானங்களை எடுத்து செயற்பட வேண்டிய ஜனாதிபதி பதவியில் எப்படி காரியமாற்ற முடியும் என்ற நியாயமான கேள்விகள், சந்தேகங்கள் இருக்கின்றன என்பது மறுக்க முடியாததுதான்.

நிலைமை வரும்போது அனுபவத்தில் தான் அதைக் காண - எதிர் கொள்ள -வேண்டி இருக்கும்.



# சஜித் அல்லது அநுரகுமாரவிடம் வடக்குக்கான தீர்வு கிடையாது!



(முதலாம் பக்கத் தொடர்ச்சி )

"வடக்கின் விடயங்களை அரசியல் பிரச்சினைகளுக்கு மாத்திரம் மட்டுப்படுத்த முடியாது. வடக்குக்கு அபிவிருத்தியும் அவசியம். இல்லையெனில் ஏனைய மாகாணங்கள் முன்னேறுகையில் வடக்கு பின்தங்கிவிடும். வடக்கின் அபிவிருத்தியைப் போன்றே அரசியல் பிரச்சினைகளுக்கும் தீர்வு காண்பேன்."

– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

மாகாண சபைகளை வலுப்படுத்தி அதிகாரங்களை வழங்குவது தொடர்பாக தனது கொள்கைப் பிரகடனத்தில் உள்ளடக்கியுள்ளதாகவும், மத்திய அரசுக்கு உதவும் வகையில் 9 மாகாண சிற்றரசுகளின் கீழ் அபிவிருத்தி வேலைத்திட்டம் துரிதப்படுத்தப்படும் எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

தேசிய காணி ஆணைக்குழு மற்றும் உண்மை நல்லிணக்க ஆணைக்குழு ஸ்தாபிக்கப்படும் எனவும், நவாஸ் ஆணைக்குழுவின் பரிந்துரைக்கமைவாக எதிர்வரும் 5 வருடங்களில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணம் – நாவாந்துறை சென் மேரிஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இன்று சனிக்கிழமை "ரணிலால் இயலும்" என்ற தொனிப்பொருளில் பிரசாரக் கூட்டம் நடைபெற்றது. அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் உரையாற்றும்போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு கூறினார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றியை உறுதிப்படுத்தும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்தக் கூட்டத்தில் பெருந்திரளான மக்கள் கலந்துகொண்டனர்.

முன்னாள் விவசாய அமைச்சர் அநுரகுமார எவ்வாறு தென்னிலங்கையில் மாகாண சபைகளுக்கு எதிராக மாபெரும் போராட்டத்தை முன்னெடுத்தார் என்பதை நினைவுகூர்ந்த ஜனாதிபதி ரணில், இன்று யாழ்ப்பாணம் வந்து மக்களுக்கு பல்வேறு வாக்குறுதிகளை வழங்கிய போதிலும் இந்த விடயங்கள் தொடர்பில் மக்களுக்கு உறுதிமொழி அளிக்க வேண்டும் எனவும் வலியுறுத்தினார்.

கடந்த பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்து நாட்டிலுள்ள தமிழ், சிங்கள, முஸ்லிம் என அனைத்து மக்களும் நம்பிக்கை இழந்திருந்த நிலையில் அவர்களுக்கு நம்பிக்கையை வழங்குவதற்காகத் தாம் பாடுபட்டதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

"இயலும் ஸ்ரீலங்கா" திட்டத்தின் மூலம் நாட்டின் எதிர்காலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது எனவும், தற்போது நாட்டின் பொருளாதார வாயில்கள் திறந்துள்ளன எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்துடன் இலங்கை அரசு ஆரம்பித்துள்ள வேலைத்திட்டத்தை வலுவாகத் தொடராவிட்டால் நாட்டின் பொருளாதாரம் மீண்டும் வீழ்ச்சியடையக்கூடும் என சர்வதேச நாணய நிதியம் நேற்று விடுத்த எச்சரிக்கையை நினைவுகூர்ந்த ஜனாதிபதி, நாட்டைக் கட்டியெழுப்பும் திட்டத்தைப் பாதுகாப்பது அனைவரினதும் பொறுப்பாகும் எனவும் சுட்டிக்காட்டினார்.

இன்னும் 3 வருடங்களுக்கு இந்த வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தினால் நாட்டின் பொருளாதாரத்தை மீண்டும் எவராலும் உடைக்க முடியாது எனத் தெரிவித்த சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, வடக்கை அபிவிருத்தி செய்யும் வேலைத்திட்டமொன்று வடக்குக்கு அவசியம் எனவும், சஜித் பிரேமதாஸவிடமோ அல்லது அநுர குமார திஸாநாயக்கவிடமோ அதற்கான தீர்வு இல்லை எனவும் குறிப்பிட்டார்.

"காஸ் சிலிண்டருக்கு வாக்களியுங்கள். தவறினாலும் காஸ்ூம் இல்லை. யாழ்ப்பாணத்துக்கு அபிவிருத்தியும் இல்லை" எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவித்தார்.




# ரணிலுக்கு ஆதரவு தெரிவித்து முல்லைத்தீவில் பிரச்சாரம்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

முல்லைத்தீவு உடையார்கட்டு நகரப் பகுதில் ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரித்து இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளார்.

தமிழ், முஸ்லிம் மற்றும் சிங்கள வாக்காளர்களை சந்தித்து அவர்களிடம் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவால் வெளியிடப்பட தேர்தல் விஞ்ஞானத்தைக் கையளித்து வருகிறார்.



# 5 லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான குடி தண்ணீர் சுத்திகரிப்பு இயந்திரம் வழங்கல்



சந்நிதியான் ஆச்சிரமம் நெல்லியடி மெ.மி.த.க. பாடசாலைக்கு 5 லட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவில் குடி தண்ணீர் சுத்திகரிப்பு இயந்திரம் ஒன்றை வழங்கியுள்ளது.

நெல்லியடி மெதடிஸ்த மிசன் தமிழ்க் கலவன் பாடசாலையின் கோரிக்கைக்கு அமைவாக, தொண்டமனாறு சந்நிதியான் ஆச்சிரமம் குடிதண்ணீர் சுத்திகரிப்பு இயந்திரத்தைப் பொருத்தி, பாடசாலை சமூகத்திடம் சம்பிரதாய பூர்வமாகக் கையளித்துள்ளது.

பாடசாலை முதல்வர் நாகராஜா ரவீந்திரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் கலந்துகொண்டு குடிதண்ணீர் தொகுதியைத் திறந்து வைத்துக் கையளித்தார்.

இந்த நிகழ்வில் மருத்துவர் செந்தில் குமரன், பாடசாலை பழைய மாணவர் சங்க நிர்வாகத்தினர், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் ஆச்சிரம தொண்டர்கள் பங்கு கொண்டனர்.

குணம்ஸ் சுப்பர் மார்க்கட்
GUNAAM'S SUPER MARKET
1145 Morningside Ave Unit #33,
Scarborough, ON M1B 0A7
Contact : 416 283 9998






# சந்நிதியான் ஆச்சிரமத்தின் 320 ஆவது ஞானச்சுடர்!

வடமராட்சி, தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தின் மாதாந்த வெளியீடான ஞானச்சுடர் ஆன்மீக சஞ்சிகையின் 320 இதழ் வெளியீடும், பல்வேறு உதவிகள் வழங்கும் நிகழ்வும் சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டு பேரவை உறுப்பினர் சிவ நாதன் தலைமையில் சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகன தாஸ் சுவாமிகள் திருமுன்னிலையில் இடம் பெற்றன.

இதில் முதல் நிகழ்வாகப் பஞ்ச புராணம் ஓதப்பட்டது. அதனை தொடர்ந்து வெளியீட்டுரையைச் சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டு பேரவையின் உறுப்பினரும் ஓய்வு பெற்ற அதிபருமான இரா. சிறிநடராசா நிகழ்த்தினார். தொடர்ந்து சிறப்புப் பிரதிகள் வழங்கிவைக்கப்பட்டன.

அத்துடன் உதவித் திட்டங்களாக, அளவெட்டி அருணாசலம் வித்தியாலயத் தின் கோரிக்கைக்கு அமைவாக, மாண வர்களின் பரீட்சை தேவைகளுக் காக எழுதுபொருள் வகைகள் வழங்கப் பட்டன.

முல்லைத்தீவு இசைக்கலாலயத் துக்கு பிள்ளையார் சிலைக்கான நிதி யாக 25 ஆயிரம் ரூபா வழங்கப் பட்டது.

அதேவேளை மலரும் மூளாய் அபிவிருத்தி அமையத்துக்கு மூளாய் பிரதேச பொருளாதாரத்தால் பாதிக்கப் பட்ட மக்களுக்கு வழங்குவதற்கென 500 கிலோ அரிசியும் வழங்கிவைக்கப் பட்டது.

மலையகம் - பண்டாரவளை பிரதே சத்தை சேர்ந்த சௌதம் தமிழ் மகா வித்தியாலயத்தினுடைய மாணவி ஒருவரின் மேற்படிப்புக்காக 50 ஆயிரம் ரூபா நிதியும் வழங்கப்பட்டது .

இந்த நிகழ்வில் சந்நிதியான் ஆச் சிரம சைவ கலை பண்பாட்டு பேரவை நிர்வாகிகள், உறுப்பினர்கள், சந்நிதி யான் ஆச்சிரம தொண்டர்கள், அடிய வர்கள் கலந்து கொண்டனர்.




# ஸாஹிராவின் பழைய மாணவர் கல்முனையில் இரத்ததானம்

**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

கல்முனை ஸாஹிரா தேசிய கல்லூரி பழைய மாணவர்கள் அமைப்பான ஸஹிரியன்'90 நண்பர்கள் வட்டத்தால் கல்முனை அஸ்றப் ஞாபகார்த்த வைத்தி யசாலையில் இரத்ததானம் செய் யப்பட்டுள்ளது.

கல்முனை அஸ்றப் ஞாப கார்த்த வைத்தியலையின் இரத்த வங்கியில் நிலவும் குருதி தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் வகையில் இரத்ததான நிகழ் வொன்று வைத்தியசாலையில் ஏற்பாடு செய்யப்பட்டது.

கல்முனை ஸாஹிரா தேசிய கல்லூரியின் பழைய மாணவர்கள் அமைப்பான ஸஹிரியன்ஸை '90 நண்பர்கள் வட்டத்தால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த இந்த நிகழ்வில் பழைய மாணவர்கள் குருதிக் கொடை வழங்கினர்.








# சஜித்தின் தேர்தல் அலுவலகம் முதலைக்குடாவில் திறந்து வைப்பு

(வி.ரி.சகாதேவராஜா)

ஜனாதிபதி வேட்பாளரும் ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் தலைவருமான சஜித் பிரேமதாஸவின் தேர்தல் பிரச்சார அலுவலகம் கொக்கட்டிச்சோலை முதலைக்குடாவில் நேற்று வெள்ளிக் கிழமை திறந்து வைக்கப்பட்டது.

ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் மட்டக்களப்பு மாவட்டத் தலைவரும் முன்னாள் பிரதி அமைச்சருமான சோ. கணேசமூர்த்தி அலுவலகத்தை நாடா வெட்டித் திறந்து வைத்தார் .

ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் பட்டிப்பளை பிரதேச தலைவரும் முன் னாள் தவிசாளரும் அதிபருமான சிவ. அகிலேஸ்வரன் தலைமையில் திறப்பு விழா இடம்பெற்றது.

விழாவில் ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட பிரச்சார செயலாளர் வெ.சுதாகரன் உள்ளிட்ட ஆதரவாளர்களும் கலந்து கொண்டனர்.

ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவின் துண்டு பிரசுரங்களும் விநியோகிக்கப்பட்டன.








# மூவின மக்களும் ஒற்றுமையாக வாழ சஜித்தை ஆட்சிபீடம் ஏற்றுதல் வேண்டும்

## முஸ்லிம் காங்கிரஸின் உறுப்பினர் யஹியாகான் தெரிவிப்பு

(எம்.எப்.றிபாஸ்)

தமிழ், முஸ்லிம், சிங்கள சமூகம் இந்த நாட்டில் ஒற்றுமையாக வாழ வேண்டுமாகவிருந்தால் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவை ஆட்சிபீடம் ஏற்றவேண்டும். அப்போது தான் இந்த நாடும் நாட்டு மக்களும் சுபீட்சம் பெற்றவர்களாக மாற முடியும்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதி பொருளாளரும், உயர் பீட உறுப்பினருமான ஏ. சீ. யஹியாகான் இவ்வாறு தெரிவித்தார்.

சாய்ந்தமருது பிரதேசத்தில் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவை ஆதரித்துத் திறந்து வைக்கப்பட்ட அலுவலகத்தில் இடம் பெற்ற மக்கள் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

தொடர்ந்தும் அவர் தனது உரையில், ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப்ஹக்கீமின் கரத்தை பலப்படுத்துவதன் மூலம் சஜித் பிரேமதாஸ நிச்சயம் வெற்றி பெறுவார்.

மக்களின் ஜனநாயக ஆணையை மீறி நாட்டையும், நாட்டின் வளங்களையும் கொள்ளையடித்த கூட்டத்தை எதிர்வரும் தேர்தலுடன் முடிவுக்கு கொண்டு வர வேண்டும். இவர்களது பொய் பிரச்சாரங்களுக்கு நாம் ஒரு போதும் இடமளிக்கக் கூடாது.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இந்தத் தேர்தலில் வெற்றி பெறுவது உறுதி செய்யப்பட்ட விடயமாகும். இந்த நிலையில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியை நேசிக்கின்ற நாம் இப்பிரதேசத்தில் ஒன்றாக இணைந்து முழுமையான பங்களிப்புக்களையும் செய்ய வேண்டும்.

எல்லா வகையான வேலைத் திட்டங்களிலும் கொள்ளையடிப்பதையும், சுரண்டுவதையும் நோக்கமாகக் கொண்டிருந்தவர்களால்தான் இந்த நாடு பெரும் பஞ்சத்தை அனுபவித்தது. இதனால் நாட்டு மக்கள் அனுபவித்த துன்ப துயரங்கள் ஏராளம்.

இப்படிப்பட்டவர்களை மீண்டும் ஆட்சிக்கு கொண்டு வருவது இந்த நாட்டு மக்களுக்கு செய்யும் துரோகமாகும்.

மக்களின் ஜனநாயக ஆணையை மீறி அல்லது உதாசீனப்படுத்தி சர்வதேசத்தின் உதவியோடு ஊழல் மோசடி செய்து வெற்றி பெற முயற்சித்தால் அவ்வாறானவர்கள் மீண்டும் ஒரு மக்கள் புரட்சியை சந்திக்க வேண்டிய நிலை ஏற்படும். இதனால் அவர்கள் நாட்டை விட்டு ஓடுமளவுக்கு நிலமை மாறிவிடும்.

போராளிகளாகிய நாம் வீடு வீடாகச் சென்று சஜித் பிரேமதாஸவின் சின்னத்துக்கு வாக்களிக்குமாறு மக்களை ஒன்று திரட்டுவதோடு ஊழல் நிறைந்த ஆட்சியை முடிவுக்கு கொண்டு வந்து கொள்ளை கும்பலை வீட்டுக்கு அனுப்ப வேண்டும்

இத்தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க படுதோல்வி அடைவதுடன், ஜனநாயகத்தையும் ஜனநாயக ஆட்சியையும் மதிக்கின்ற சஜித் பிரேமதாஸ அமோக வெற்றி பெற்று இந்த நாட்டின் ஜனாதிபதியாக வருவார் என்பதில் மாற்றுக்கருத்து கிடையாது.- என்றார்.



# புலமைப் பரிசில் பரீட்சை எழுதவுள்ள மாணவர்களுக்கு ஆசீர்வாதம் வழங்கல்

## கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தில்

(வி.ரி.சகாதேவராஜா)

நாளை ஞாயிற்றுக்கிழமை தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான இறையாசி மற்றும் எழுதுகருவி வழங்குகின்ற நிகழ்வு வரலாற்று பிரசித்தி பெற்ற கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தில், நேற்று (13) வெள்ளிக்கிழமை நடைபெற்றது .

ஆலய பிரதம குருக்கள் சிவசிறி மு.கு.சச்சிதானந்த குருக்கள் முன்னிலையில் ஆலய தலைவர் இ. மேகராசா தலைமையில் நிகழ்வு இடம் பெற்றது.

மண்முனை தென்மேற்கு கோட்டக் கல்வி அலுவலகம், இளைஞர் சேவை மன்ற பிரதேச சம்மேளனம், எழுத்தாணி இந்து இளைஞர் மன்றம் ஆகியன இணைந்து இந்த நிகழ்வை நடத்தின.

மாணவர்களுக்கான எழுது கருவிகள் ஆலயத்தில் பூஜையில் வைக்கப்பட்டு இங்கு இறையாசி வழங்கி வைக்கப்பட்டது.

பட்டிப்பளை பிரதேசத்தை சேர்ந்த 19 பாடசாலைகளின் 409 மாணவர்களுக்கு இந்த எழுது கருவிகள் வழங்கப்பட்டன.

நிகழ்வில் மட்டக்களப்பு மேற்கு வலய ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி உமாபதி விவேகானந்தம், கோட்டக் கல்வி பணிப்பாளர் மூ. உதயகுமாரன், மாவட்ட இளைஞர் சேவை அதிகாரி ஏ.தயாசீலன், சம்மாந்துறை உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.ரி.சகாதேவராஜா, காரைதீவு முன்னாள் தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில், முன்னாள் அதிபர் தவிசாளர் சிவ.அகிலேஸ்வரன், அதிபர் வ.சுந்தரநாதன் உள்ளிட்ட கல்வி அதிகாரிகள் கலந்து கொண்டனர்.







ஆசிரியர்கள், மாணவர்களும் நிகழ்வில் கலந்து கொண்டார்கள்.

நிறைவில் முதலைக்குடா மகாவித்தியாலயத்தின் அன்னதான நிகழ்வு நடைபெற்றது.





# தொழுநோயை கட்டுப்படுத்துவது தொடர்பிலான செயலமர்வு

**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

கல்முனை பிராந்தியதில் தொழு நோயை கட்டுப்படுத்துவது தொடர்பில் பொது சுகாதார பரிசோதகர்களுக்கும் தாதி உத்தியோஸ்தர்களுக்கும் தெளிவு படுத்தும் செயலமர்வு இடம்பெற்றுள்ளது.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் சகீலா இஸ்ஸதீன் ஆலோசனையில் கல்முனை பிராந்தியத்தில் தொழுநோயை கட்டுப் படுத்துவதற்கான விசேட செயலமர்வு பணிமனை கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்த செயலமர்வில் தொழு நோயா ளர்களை கண்டறிந்து அவர்களை குணப் படுத்துவதற்கான விசேட வேலைத் திட்டம் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

இதன்போது பொதுச் சுகாதார பரி சோதகர்கள் மற்றும் தாதி உத்தியோஸ் த ர்கள் கலந்து கொண்டனர்.






# சுகாதார விழிப்புணர்வு செயலமர்வு மாணவருக்கு

**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

கல்முனை பிராந்திய பாலியல் தொற்று நோய்கள் மற்றும் எயிட்ஸ் தடுப்பு திட்டத்தின் கீழ் பாடசாலை மாணவர்களுக்கான பாலியல் சுகாதார விழிப்புணர்வு செயலமர்வு இடம்பெற் றுள்ளது.

ஆலையடிவேம்பு, சுகாதார வைத் திய அதிகாரி அலுவலகத்துக்கு உட்பட்ட கோளாவில், விநாயகர் மகா வித்தியா லயத்தில் க.பொ.த.சாதாரண தர மாணவர்களுக்கு, “இளம் பருவத்தினர் மற்றும் இளைஞர்களுக்கான பாலியல் ஆரோக்கியம் மற்றும் சவால்கள்” எனும் தலைப்பிலான விழிப்புணர்வுக் கருத்தரங்கு இடம்பெற்றது.

கல்முனை பிராந்திய பாலியல் தொற்று நோய்கள் மற்றும் எயிட்ஸ் தடுப்புத் திட்டத்தின் பொறுப்பு வைத் தியர், வைத்தியக் கலாநிதி ஐ.எல். ஜலால்தீன் தலைமையிலும் மற்றும் பொதுச் சுகாதார பரிசோதகர்களின் பூரண பங்களிப்புடனும் இந் நிகழ்வு இடம்பெற்றது.




# உதவித் தெரிவத்தாட்சி அலுவலர் செயலமர்வு



**(எஸ்.கீதபொன்கலன்)**

எதிர்வரும் 21 ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலின்போது வாக்கெண்ணும் நிலையங்களில் உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களாகக் கடமையாற்றவுள்ள அதிகாரிகளுக்கான செயலமர்வானது, திருகோணமலை மாவட்ட அரச அதிபரும் தெரிவத்தாட்சி அலுவலருமான சாமிந்த ஹெட்டியாரச்சி தலைமையில் நேற்று வெள்ளிக் கிழமை (13) மாவட்ட செயலக பிரதான மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

தமிழ் மொழி பேசும் வாக்கெண்ணும் நிலையத்தின் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கான செயலமர்வு முற்பகல் 10 மணிக்கும், சிங்கள மொழி பேசும் வாக்கெண்ணும் நிலையத்தின் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கான செயலமர்வு பிற்பகல் 2 மணிக்கும் இரண்டு கட்டங்களாக நடைபெற்றன.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக வாக்கெண்ணும் நிலையத்தின் உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கான கடமைகள் மற்றும் பொறுப்புக்கள், 1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க ஜனாதிபதித் தேர்தல் சட்டம், வாக்கெண்ண லுக்கான முன்னேற்பாடுகள், அனைத்து வாக்குப் பெட்டிகளும் கிடைத்ததன் பின்னர் பின்பற்ற வேண்டிய விடயங்கள், அறிக்கைகள் தொடர்பாக நடவடிக்கை எடுத்தல், வாக்கெண்ணல் நடவடிக்கையை ஆரம்பித்தல், வாக் கெண்ணலின் மூன்று கட்டங்கள், விருப்பு வாக்கெண்ணும் செயன்முறை, வாக்குச்சீட்டுகளை பெட்டிகளில் இடுதல், ஒரு வேட்பாளருக்குரிய அனைத்து வாக்குச்சீட்டுக்களும் பிரித்து வேறாக்கப்பட்டதும் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் போன்ற பல விடயங்கள் குறித்து இதன்போது மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் ஆர்.சசீலன் மற்றும் மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் உதவிச் செயலாளரும் அஞ்சல் மூல வாக்கு உதவி தெரிவத்தாட்சி அலுவலருமான எஸ்.கே.டி நிரஞ்சன் ஆகியோரால் தெளிவூட்டப்பட்டது.

இந்தச் செயலமர்வில் மேலதிக அரச அதிபர் எஸ். சுதாகரனும் கலந்து கொண்டார்.






# சிறப்பாக இடம் பெற்றது மன்னார் கலாசார விழா



**(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)**

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனு சரணையுடன், மன்னார் பிரதேச செயலகமும், கலாசார பேரவையும் இணைந்து ஏற்பாடு செய்த மன்னார் பிரதேச கலாசார விழா நேற்று வெள்ளிக்கிழமை (13) மாலை மன்னார் நகர சபை மண்டபத்தில் இடம்பெற்றது.

மன்னார் நகர பிரதேச செயலாளர் மனோகரன் பிரதீப் தலைமையில் தலைமையில் நிகழ்வு இடம்பெற்றது.

இதன் போது சர்வமத தலைவர்கள் கலந்து கொண்டனர். பிரதம விருந்தினராக மன்னார் மாவட்ட அரச அதிபர் க.கனகேஸ்வரன் மற்றும் விருந்தினர்களாக மேலதிக மாவட்ட செயலாளர் (நிர்வாகம்) ய.பரந்தாமன், மேலதிக மாவட்ட செயலாளர் (காணி) மா.சிறிஸ்கந்த குமார், வட மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள பிரதி பணிப்பாளர் திருமதி லாஹினி நிருபராஜ், மன்னார் கமநல சேவைகள் திணைக்கள உதவி ஆணையாளர் அ.மரின்குமார், கலாபூசணம் ஜோன் பொஸ்கோ ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன் போது மாவட்டச் செயலகத்துக்கு முன்பாக இருந்து விருந்தினர்கள் கலாச்சார பேரணி ஊடாக மன்னார் நகர சபை மண்டபம்வரை மங்கள வாத்திய இசையுடன் அழைத்து வரப்பட்டனர்.

நகரசபை மண்டபத்தில் கலாச்சார நிகழ்வுகள் இடம் பெற்றதோடு, பரிசளிப்பு நிகழ்வு மற்றும் கலைஞர்களை கௌரவிக்கும் நிகழ்வும் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.





# இந்தியாவில் காந்தியும் ஈழத்தில் திலீபனும்!

■ நவீனன்

(நாளை 15.09.1987 இல் தமிழரின் உரிமைக்காகத் தன்னை மெழுகாய் உருகத் தொடங்கிய திலீபனின் உண்ணா விரதம் ஆரம்பமாகிய நாள். மகாத்மா காந்தி உருவாக்கிய அகிம்சை வழி போராட்டம், திலீபனின் தியாகத்தால் உச்சம் தொட்டதை உலகம் உணர முடிந்தது.)

அகிம்சை ஒரு நெடிய போராட்டம். போராடிக் கொண்டே இருக்கலாம். முடிவு போராட்டத்தின் கையில் இல்லை. எதிராளியின் வலிமையை பொறுத்தே உள்ளது.

காந்தியால் இந்திய நாட்டுக்கு சுதந்திரம் கிடைக்கவில்லை என்று கடந்த வருடம் தமிழ்நாடு ஆளுநர் ஆர். என். ரவி சொல்லி இருப்பதை பலரும் விமர்சித்து உள்ளனர்.

இவ்வேளையில் அகிம்சையின் உச்சம் தொட்ட திலீபனின் தியாகத்தையும் உணர வேண்டும். மகாத்மா காந்தி குறித்து ஆளுநர் சொல்லியிருப்பது வன்மம் கலந்த நோக்கமே என்றும் தமிழக முதல்வர் ஸ்டாலின் கடும் கண்டனம் தெரிவித்துள்ளதுடன், முதல்வர் இதனை கடுமையாக சாடியுள்ளார்.

கடந்த வருடம் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் பிறந்த நாளை முன்னிட்டு சென்னை அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் நடந்த நிகழ்ச்சியில் தமிழக ஆளுநர் ரவி பங்கேற்று பேசினார். அப்போது, மகாத்மா காந்தி குறித்து ஆளுநர் பேசிய கருத்துக்கள் விமர்சனத்துக்கு உள்ளானது.

எனினும் காந்தியின் அகிம்சை அவர் பற்றியும், காந்தி பெற்றுத் தந்த இந்திய சுதந்திரம் பற்றியும் பல்வேறு கருத்துக்கள் உள்ளன. ஏன், மகாத்மா காந்தியை விட திலீபனின் தியாகத்தால் சிறந்தவன் என இந்திய அரசியல் தலைவர்களே கருத்துத் தெரிவித்துள்ளனர்.

ஆயினும் காந்தி தேசத்தின் தமிழின விரோத நிலைப்பாட்டின் அழியா சாட்சியாக விளங்குவதே தியாக தீபம் திலீபனின் உயிர்க் கொடையாகும். திலீபனின் போராட்டம் மற்றொரு முறை அகிம்சை என்ற தத்துவத்தின் உண்மை நிலையை பிரதிபலிப்பதாகவே உள்ளது.

### காந்தியை விட திலீபன் மேலானவன்

திலீபன் சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொண்டு இருந்த போது, அன்றைய இந்தியத் தூதுவர் தீக்சித் இடம் திலிபனின் உண்ணாவிரதம் பற்றி பத்திரிகையாளர்கள் கேள்வி எழுப்பியிருந்தார்கள். அதற்குப் பதிலளித்த தீக்சித், திலீபன் என்ன மகாத்மா காந்தியா? என்று இறுமாப்புடன் தெரிவித்திருந்தார்.

இந்தியத் தூதுவர் தீக்சித்தின் இந்தக் கூற்று பற்றி பின்னர் கருத்துத் தெரிவித்திருந்த வை.கோபால்சாமி, திலீபன் மகாத்மா காந்தியைவிட சிறந்தவன் என்று அடித்துக் கூறியிருந்தார்.

வைகோ, தனது இந்த வாதத்துக்காக மகாத்மா காந்தியின் சுயசரிதையான சத்திய சோதனையில் இருந்து ஒரு சம்பவத்தையும் எடுத்துக் காண்பித்திருந்தார். மகாத்மா காந்தியின் இளமைப் பருவத்தின் போது அவரது தந்தை காலமாகிவிட்டார்.

தந்தையின் பூதவுடல் அஞ்சலிக்காக வீட்டின் கூடத்தில் கிடத்தி இருக்கையில், தனது இளமையின் பாலியல் உணர்ச்சிகளை காந்தியால் கட்டுப்படுத்தமுடியாமல் மறைவில் சென்று அதனை தீர்த்துக்கொண்டதாக சத்திய சோதனையில் காந்தி தெரிவித்திருந்தார்.

இளவயதின் உணர்ச்சிகளை மகாத்மாவாலேயே அடக்க முடியாது இருந்துள்ளது. ஒரு சோகமான நேரத்தில்கூட மகாத்மாவால் தனது பாலியல் உணர்வுகளை கட்டுப்படுத்தமுடியாமல் அதற்கு வடிகால் தேடிச் சென்றுள்ளார்.


ஆனால் திலீபனோ தனது இள வயதில், அந்த வயதுக்கான அனைத்து உணர்ச்சிகளையும் உதறித் தள்ளிவிட்டு, தனது கொள்கைக்காக தன்னுயிரை தியாகம் செய்ய முன்வந்திருந்தான். இதனாலேயே மகாத்மா காந்தியை விட திலீபன் மேலானவன் என வை.கோபால்சாமி தெரிவித்திருந்தார்.

### ஒப்பிலா அறவழி போராளி திலீபன்

நான் மனரீதியாக ஆத்மார்த்தமாக எமது மக்கள் விடுதலை அடைவார்கள் என உணர்கிறேன். மகிழ்ச்சியுடனும் பூரண திருப்தியுடனும் உங்களிடமிருந்து இறுதி விடைபெறுகிறேன் என தன்னுடலுக்கு துரோகமும் தன்னினத்துக்கு தன்னையும் தந்த ஒப்பிலா அறவழிப் போராளி திலீபனின் இறுதி வார்த்தைகளே இவையாகும்.

தமிழீழம் என்பது சகல அடக்குமுறைகளையும் உடைத்தெறிந்த ஒரு சமதர்ம சோசலிச தமிழீழமாகத் தான் மலரும் என்ற விடுதலைக் கனலை விழியிலேந்திய பார்த்திபன் இராசையா என்னும் இயற் பெயர் கொண்ட திலீபன், நவம்பர் 29, 1963 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் உள்ள வலிகாமம் பிரதேசத்தின் ஊரெழு கிராமத்தில் ஆசிரியருக்கு மகனாகப் பிறந்தவர். சிறு வயதிலேயே தாயை இழந்தார். தந்தையின் பாசம், இரு அண்ணன்களின் அரவணைப்பு என மிகவும் செல்லமாக வளர்ந்த திலீபன் படிப்பிலும், அறிவுக்

தொடர்ச்சி ▼



# இந்தியாவில் காந்தியும் ஈழத்தில் திலீபனும்!

தொடர்ச்சி▲

கூர்மையிலும் மிகுந்த திறனுடையவராக இருந்தார்.

இலங்கை அரசு தமிழ் மாணவர்களின் கல்வியை நாசப்படுத்த கொண்டு வந்த தரப்படுத்துதல் அளவையும் தாண்டி அதிக மதிப்பெண் எடுத்து யாழ். மருத்துவப் பல்கலைக்கழகத்தில் தேர்வாகி படிக்கச் சென்றார். மருத்துவம் படித்து மக்களுக்கு சேவை செய்ய நினைத்த மகத்தான மனிதன் தன்னின மக்கள் சிலரிடம் நோயாக மாறியிருந்த இனவுணர்வுக் குறைபாட்டை போக்க தனது உயிரையே மருந்தாக அளித்த துயரமும் நடந்தேறியது.

காந்தியின் அகிம்சை வழியில் தன் விடுதலையை பெற்றெடுத்ததாக கூறும் இந்தியா. உலகெங்கிலும் அகிம்சை குறித்து அறிவுரை கூறிக் கொண்டிருக்கும் இந்தியா, அகிம்சை போராட்டத்தை கையிலெடுத்த திலீபனுக்கு அளித்த பரிசு இதுதான்.

உண்மையில் அகிம்சை மூலமாக இந்தியா விடுதலைப் பெற்றது என்பதே இந்திய விடுதலையை ஒட்டி எழுப்பபட்ட மிகைப்படுத்தப்பட்ட பிம்பம் தானே தவிர அகிம்சை மட்டுமே இந்தியாவின் விடுதலைக்கு காரணமாக அமைந்து விட வில்லை. இந்திய விடுதலை அகிம்சையினால் நிகழ்ந்தது என்றால் அதனைவிட ஆயுதமேந்தி போராடிய இந்திய வீரர்களை மறந்துவிட முடியாது.

தமிழ் நாடு ஆளுநரின் கருத்துக்கு கண்டனங்கள் எழுந்தாலும், காந்தியின் அகிம்சையும் திலீபனின் உயிர்க்கொடையையும் ஒரே தட்டில் ஒப்பிட முடியாது. திலீபனுக்கும், காந்திக்கும் நிறைய வேறுபாடு உள்ளது. திலீபன் காந்திய வழியில் தன் போராட்டத்தை முயன்றார். ஆனால் காந்தி போல உயிர் வாழ முயலவில்லை. திலீபன் தன் உயிரை ஒரு பொருட்டாகக் கருதவில்லை. தியாகத்தின் உச்சத்துக்கே திலீபன் சென்றார்.



# டில்லி முதல்வர் அரவிந்த் கேஜ்ரிவால் உடனடியாக பதவி விலக வேண்டும்

## பா.ஜ.க. வலியுறுத்தல்



பிணை நிபந்தனைகளை சுட்டிக் காட்டி டில்லி முதல்வர் அரவிந்த் கேஜ்ரிவால் உடனடியாக பதவி விலக வேண்டும் என பா.ஜ.க. வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பாக டில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய பா.ஜ.க. தேசிய செய்தித் தொடர்பாளர் கவுரவ் பாட்டியா, "டில்லி மதுபான கொள்கை முறை கேடு வழக்கில் முதல்வர் அரவிந்த் கேஜ்ரிவாலுக்கு உச்ச நீதிமன்றம் நிபந்தனை பிணை வழங்கி உள்ளது. அந்த நிபந்தனைகள் மூலம் கேஜ்ரிவால் தான் யார் என்பதை அறிந்து கொள்வதற்காக அவருக்கு கண்ணாடி காட்டப்பட்டுள்ளது.

சிறைவாசியாக இருந்த முதல்வர் கேஜ்ரிவால் இனி பிணை பெற்றவராக இருப்பார். மிக முக்கியமான விஷயம் என்னவென்றால், டில்லி மக்களின் குரலுக்கு மதிப்பளித்து அரவிந்த் கேஜ்ரிவால் முதல்வர் பதவியை இராஜினாமா செய்ய வேண்டும். ஆனால், அவருக்கு துளி கூட தார்மிகம் இல்லாததால் அதை அவர் செய்ய மாட்டார். ஒரு அரசியல்வாதி ஒரு குற்றச்சாட்டு வந்தாலும் பதவி விலக வேண்டும்.

ஆனால், 6 மாதங்கள் சிறையில் இருந்தபோதும், அவர் இராஜினாமா செய்யவில்லை. இப்போது அவர் குற்றம் சாட்டப்பட்டவர்.

தன்னை கைது செய்தது சட்டவிரோதம் என்பது நீதிமன்றத்தில் கேஜ்ரிவாலின் வாதமாக இருந்தது. ஆனால், கேஜ்ரிவாலின் கைது அரசியல் சட்டத்திற்கு உட்பட்டது என்று உச்ச நீதிமன்றம் தெரிவித்துள்ளது. இதன்மூலம், ஆம் ஆத்மி கட்சியின் பிரச்சாரத்தை உச்ச நீதிமன்றம் முறியடித்துள்ளது. வழக்கில் இருந்து கேஜ்ரிவால் விடுவிக்கப்படவில்லை. விசாரணை தொடரும் என்பதால் விடுதலை என்ற பேச்சுக்கே இடமில்லை.

உச்ச நீதிமன்றத்தின் நிபந்தனைகளின்படி, அரவிந்த் கேஜ்ரிவாலின் பாஸ்போர்ட் உச்ச நீதிமன்றத்திடம் இருக்கும். அவரால் வெளிநாடுகளுக்கு பயணிக்க முடியாது. வாரத்திற்கு இரண்டு முறை திங்கள் மற்றும் வியாழன் தோறும் விசாரணை அதிகாரி முன் அரவிந்த் கேஜ்ரிவால் ஆஜராக வேண்டும். சாட்சியிடம் பேச முடியாது.

அரவிந்த் கேஜ்ரிவால் ஏன் இராஜினாமா செய்யவில்லை என்பதற்கு ஆம் ஆத்மி கட்சி பதில் சொல்ல வேண்டும். ஊழல்வாதி அரவிந்த் கேஜ்ரிவால் என்றாவது ஒரு நாள் தலைகுனிவார். அவரிடமிருந்து இராஜினாமாவை மக்கள் வாங்குவார்கள்." என்று தெரிவித்துள்ளார்.

# விஜய் கட்சியின் மாநாடு தள்ளிப்போக வாய்ப்பு

நடிகர் விஜய்யின் தமிழக வெற்றிக் கழகம் கட்சி மாநாடு எதிர்வரும் 23 ஆம் திகதி விக்கிரவாண்டியில் நடப்பதாக தகவல் வெளியான நிலையில், தற்பொழுது அது தள்ளிப் போக வாய்ப்பு இருப்பதாக கூறப்படுகிறது.

தமிழக வெற்றிக் கழகம் என்ற கட்சியை தொடங்கியுள்ள நடிகர் விஜய், கடந்த மாதம் 22 ஆம் திகதி கட்சியின் கொடி, பாடலை அறிமுகம் செய்தார். கட்சியின் கொள்கைகள் மற்றும் கொடிக்கான விளக்கத்தை முதல் மாநாட்டில் வெளியிடுவதாகவும் தெரிவித்தார்.

பெருவாரியான வாக்காளர்களை கவரும் வகையில், கட்சியின் கொள்கைகள் அமைய வேண்டும் என்பதில் விஜய் உறுதியாக இருக்கிறார்.

இதற்காக, பலரிடமும் கருத்து கேட்கப்பட்டு கட்சியின் கொள்கைகளை அவர் வகுத்துவருவதாகவும், அந்த பணிகள் இறுதி கட்டத்தை எட்டியுள்ளதாகவும் கூறப்படுகிறது.

இதற்கிடையே, மாநாடு நடத்துவதற்கு இடம் தேர்வு செய்வதில் பல வேறு சிக்கல்களை சந்தித்த விஜய், நிறைவாக விக்கிரவாண்டியை தேர்வு செய்தார். அங்கு எதிர்வரும் 23 ஆம் திகதி மாநாடு நடத்த அனுமதி கோரி பொலிஸில் கட்சியின் பொதுச் செயலாளர் ஆனந்த் மனு கொடுத்தார்.



இதைத்தொடர்ந்து, பல்வேறு நிபந்தனைகளுடன் மாநாட்டுக்கு பொலிஸ் அனுமதி வழங்கியுள்ளது. ஆனாலும், திட்டமிட்டபடி எதிர்வரும் 23 ஆம் திகதி மாநாடு நடைபெறுமா என்பது சந்தேகமாக உள்ளது.

இதுகுறித்து கட்சி நிர்வாகிகள் சிலர் கருத்து தெரிவிக்கையில், "மாநாட்டுக்கு இடையூறு வரும் என்பது அனைவருக்கும் தெரிந்தது தான். அதனால், பணிகளை முன்கூட்டியே திட்டமிட்டிருக்க வேண்டும். பொதுச் செயலாளர் ஆனந்த் ஒருவரால் மட்டுமே எல்லா வேலைகளையும் பார்க்க முடியாது. எனவே, சில முக்கிய நிர்வாகிகளை ஒருங்கிணைத்து மாநாட்டு பணிக்காக தனி குழு அமைத்திருக்க வேண்டும். வேலையை பகிர்ந்து கொடுத்திருக்க வேண்டும். இன்னும் 10 நாள்கள் மட்டுமே உள்ள நிலையில், இதுவரை எந்த பணியும் தொடங்கப்படவில்லை. இதுபற்றி கேட்டால், தலைமையில் இருந்து அதிகாரப்பூர்வ அறிவிப்பு வரும் வரை எந்ததிட்டமிடலும் வேண்டாம். அதுவரை நிர்வாகிகள், தொண்டர்கள் காத்திருங்கள் என்கின்றனர். இதனால், அதிகாரப்பூர்வ அறிவிப்புக்காக காத்திருக்கிறோம்." – என்று தெரிவித்துள்ளனர்.

மாநாடு ஒக்டோபருக்கு தள்ளிவைக்கப்படுவதாக ஒரு தரப்பினரும், மழைக்காலம் நெருங்குவதால் 2025 ஜனவரியில் நடத்ததலைமை திட்டமிட்டு வருவதாக ஒரு தரப்பினரும் கூறுகின்றனர். இதுதொடர்பாக முக்கிய நிர்வாகிகளிடம் விஜய் தீவிர ஆலோசனை நடத்தி வருகின்றார் என கூறப்படுகிறது.



# துன்புறுத்தல்களுக்கு உள்ளான 402 சிறுவர்கள் மலேசியாவில் மீட்பு

மலேசியாவில் துன்புறுத்தல்களுக்கு உள்ளான 402 சிறுவர்கள் அந்த நாட்டு பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளனர்.

20 சிறுவர் இல்லங்களில் நடத்தப்பட்ட சோதனை நடவடிக்கைகளின் போது அவர்கள் மீட்கப்பட்டுள்ளனர்.

இந்த துன்புறுத்தல் சம்பவம் தொடர்பில் அந்த இல்லங்களின் உரிமையாளர்கள் உள்ளிட்ட 171 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

## பெரு நாட்டின் முன்னாள் ஜனாதிபதி ஆல்பர்டோ புஜிமோரி காலமானார்



பெரு நாட்டின் முன்னாள் ஜனாதிபதி ஆல்பர்டோ புஜிமோரி தனது 86 ஆவது வயதில் நேற்று முன்தினம் காலமானார் என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

1990 தொடக்கம் 2000 ஆம் ஆண்டு வரை பெருவை ஆட்சி செய்த இவர் மீது மனித உரிமை மீறல்கள், ஊழல் தொடர்பில் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

இதன்போது ஊழல் மோசடிகள், மனித உரிமை மீறல்கள் உள்ளிட்ட குற்றச்சாட்டுகளால் பதவி நீக்கம் செய்யப்பட்டு நாட்டை விட்டு வெளியேறப்பட்டார்.

அதன் பின்னர், அந்தக் குற்றச்சாட்டுகள் தொடர்பான வழக்கு விசாரணைக்குட்படுத்தப்பட்டு கைது செய்யப்பட்டதுடன் 25 ஆண்டு கால சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டது.

இதனிடையே, கடந்த 15 வருடங்களின் பின்னர் சிறைத் தண்டனையிலிருந்து விடுவிக்கப்பட்ட ஆல்பர்டோ புஜிமோரி புற்றுநோயினால் பீடிக்கப்பட்டிருந்த நிலையில் தற்போது உயிரிழந்தஷதுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## டொனால்ட் டிரம்பிற்கு எதிரான இரு குற்றவியல் வழக்குகள் தள்ளுபடி



குடியரசுக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் டொனால்ட் ட்ரம்ப் உள்ளிட்டோருக்கு எதிரான இரண்டு குற்றவியல் வழக்குகளை அமெரிக்காவின் ஜோர்ஜியா நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது.

2020 ஆம் ஆண்டில் தேர்தலில் குறுக்கீடு செய்ததமை தொடர்பில் இந்த வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

அரச சட்டத்தரணிகள் மேற்படி வழக்கில் பொய்யான குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளமை நிரூபணமாகியுள்ளதாக நீதிபதி அறிவித்திருந்தார்.

2020 ஆம் ஆண்டு தேர்தலில் ஜோர்ஜியாவில் டொனால்ட் ட்ரம்ப்பின் தோல்வியை முறியடிப்பதற்குச் சதி செய்தார் என குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டிருந்தது.

இந்தநிலையில், அனைத்து குற்றச்சாட்டுகளிலும் இருந்து டொனால்ட் ட்ரம்ப் மற்றும் 14 இணை பிரதிவாதிகள் குற்றமற்றவர்கள் என்று தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

பக்கங்கள் 05

கனடா முரசு

சனிக்கிழமை 14/09/2024

## துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் கடுங்காயம்

ஒன்றாரியோ, செப்ரம்பர் 14 வெள்ளிக்கிழமை பிற்பகல் Etobicoke இல் நடந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தைத் தொடர்ந்து ஒருவர் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்

02▶



# எயார் கனடாவின் வேலைநிறுத்தத்தை தவிர்க்க முயலுமாறு பிரதமர் கோரிக்கை

**ஒன்றாரியோ, செப்ரம்பர் 14 கனடாவின் மிகப் பெரிய விமானச் சேவையை நிறுத்துவதற்கான காலக் கெடு நெருங்கி வருவதால், பயணிகள் மற்றும் வணிகங்களுக்கு இடையூறு ஏற்படுவதைத் தவிர்ப் பதற்கு எயார் கனடா மற்றும் தொழிற் சங்கம் ஒரு ஒப்பந்தத்தை எட்ட வேண்டும் என்று பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ கூறியுள் ளார்.**

நேற்று செயிண்ட்-அன்னே-டி-பெல்லூவில் நடந்த ஒரு நிகழ்வில் பேசிய ட்ரூடோ, எந்தத் தரப்பையும் நோக்கிச் செல்ல மாட்டேன் என்று குறிப்பிட்டுள்ளார்.

'ஒவ்வொரு முறை வேலை நிறுத்தம் நடக்கும்போதும், மக்கள், அரசாங்கம் வந்து சரிசெய்யும் என்று சொல்வது எனக்குத் தெரியும். நாங்கள் அதைச் செய்யப் போவ தில்லை,' என்று ட்ஷரூடோ கூறினார்.

பேச்சுவார்த்தை மூலம் உடன்பாடு சாத்தியமில்லை என்பது தெளிவாகத் தெரியாவிட்டால் அரசாங்கம் தலை யிடாது என அவர் தெரிவித்துள் ளார்.

விமான நிறுவனமும் விமானிக ளும் நாளை ஞாயிற்றுக்கிழமை முதல் வேலைநிறுத்தம் அல்லது கத வடைப்பு குறித்த 72 மணிநேர அறிவிப்பை வெளியிடும் நிலையில் இருந்தார்கள்.



# எனோக்கி காளான் வகையில் லிஸ்டீரியா பாதிப்பு அபாயம்!

### சுகாதார, உணவுப் பரிசோதனை அமைப்பு தெரிவிப்பு

கனடாவில் இறக்குமதி செய்யப் பட்ட எனோக்கி காளான் குறித்து எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அதில் லிஸ்டீரியா பாதிப்பு அபாயம் இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கனடாவின் சுகாதார துறை மற் றும் கனடா உணவுப் பரிசோதனை அமைப்பு (CFIA) பொதுமக்களுக்கு இறக்குமதி செய்யப்பட்ட

02▶



# மிட்டவுனில் நேற்று துப்பாக்கிச் சமர்!

ஒன்றாரியோ, செப்ரம்பர் 14

நேற்று பிற்பகல் ரொறண்ரோ மிட்டவுனில் நடந்த சண்டையில் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதை அடுத்து, ஒரு பாடசாலை சிறிது நேரம் பூட்டப்பட்டது.

இந்த சம்பவம் தொடர்பில் ரொறண்ரோ பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

ரோஸ்மவுண்ட் அவென்யூ மற்றும் ஹைவியூ கிரசன்ட் அருகே, ஒக்வுட் அவென்யூ மற்றும் செயின்ட் கிளேர் அவென்யூ வெஸ்ட் பகுதியில் மதியம் 12:19 மணியளவில் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பில் தமக்கு அழைப்பு வந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸார் யாரையும் காயங்களுடன் கண்டுபிடிக்கவில்லை, ஆனால் துப்பாக்கிச் சூடு நடந்ததற்கான ஆதாரங்களைக் கண்டறிந்தனர்.

துப்பாக்கிச் சூடு தற்செயலானதா அல்லது குறிவைக்கப்பட்டதா என்பது குறித்தும், சண்டைக்கு என்ன வழி வகுத்தது என்பது பற்றியும் பொலிஸார் விசாரித்து வருகின்றனர்.




## துப்பாக்கிச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டுள்ளார்.

இஸ்லிங்டன் மற்றும் பெர்கமோட் அவென்யூ பகுதியில் நேற்று பிற்பகல் 3:38 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றதாக ரொறண்ரோ பொலிஸார் தெரிவித்துள்ளனர்.துப்பாக்கிச் சூடு நடந்தபோது, பாதிக் கப்பட்ட ஆண் ஒரு வாகனத்திற்குள் இருந்தார் எனப் பொலிஸார் தெரி வித்துள்ளனர்.

பாதிக்கப்பட்டவருக்கு கடுமையான ஆனால் உயிருக்கு ஆபத்தில்லாத காயங்கள் ஏற்பட்டுள்ளன என வைத்தியசாலை தெரிவித்துள்ளது.

தற்போது சந்தேகத்திற்கிடமான தகவல்கள் ஏதும் இல்லை என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## எனோக்கி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனோக்கி காளான்களை (Enoki mushrooms) உட் கொள்வதால் ஏற்படும் அபாயங்கள் குறித்து எச்சரிக்கின்றத்ய்.

இந்த எனோக்கி காளான்கள் Listeria monocytogenes என்ற பாதகமான பாக்டீரியாவால் மாசுபடக்கூடும் என கூறப்படுகிறது.

எனோக்கி காளான், நீளமாகவும் நெருக்கமாகவும் தோன்றி, சிறிய வெள்ளைத் தலையுடன் இருக்கும்.

இது, பெரும்பாலும் ஆசிய உணவுகளில் பயன்படுத்தப்படும் முக்கியமான பொருளாக இருந்தாலும், சில சமயங்களில் பச்சையாக உண்ணப்படுவதால், அந்த உணவின் மூலம் நோய் பரவுவதற்கான அபாயம் அதிகரிக்கிறது.

கனடாவில் கிடைக்கக் கூடிய எனோக்கி காளான்கள் பெரும்பாலும் தென் கொரியா மற்றும் சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்றன.

2020-ம் ஆண்டிலிருந்து, இந்த நாடுகளிலிருந்து பல பிராண்டுகளின் காளான், லிஸ்டீரியா பாதிப்பு காரணமாக திரும்பப் பெறப்பட்டுள்ளது.



# இத்தாலியின் மலைப் பகுதியில் ஏற்பட்ட திடீர்ப் பனிப்புயலில் கனடியப் பெண் பலி

ஒன்றாரியோ, செப்ரம்பர் 14

இத்தாலியின் மலைப்பகுதியில் ஏற்பட்ட திடீர் பனிப்புயலில் சிக்கி கனடியப் பெண் உயிரிழந்துள்ளார்.

இத்தாலியின் டோலாமைட் மலைப்பகுதியில் திடீரென ஏற்பட்ட பனிப்புயலில் சிக்கி 56 வயதான கனடிய பெண் ஒருவர் உயிரிழந்தார்.

இவருடன் பயணித்த 56 வயதான ஆண் கடுமையான ஹைபோதேமியாவுக்கு சிகிச்சை பெறுகிறார்.

இவர்கள் இருவரின் பெயர் விபரங்கள் வெளியாகவில்லை.

இவர்கள் வியாழக்கிழமை இரவு அவசர உதவியை அழைத்தனர் எனத் தெரியவருகிறது.

இதில் பெண் சம்பவ இடத்தில் மரணமடைந்ததாகவும், ஆண் சிகிச்சைக்காக ஹெலிக்கொப்டரில் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார் எனவும் தெரியவருகிறது.



# நுளம்பு கடியால் ஒருவர் ஒட்டோவாவில் மரணம்

ஒன்றாரியோ, செப்ரம்பர் 14

ஒட்டோவா நகரில் நுளம்பு கடிக்கு இலக்கான ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நுளம்பு கடியினால் ஏற்படக்கூடிய வைரஸ் தொற்று ஒன்றினால் இந்த நபர் உயிரிழந்துள்ளார் என ஒட்டாவா பொதுச் சுகாதார அலுவலகம் தெரிவித்துள்ளது.

நுளம்பு கடியில் இருந்து தங்களை பாதுகாத்துக் கொள்ளுமாறு சுகாதார அலுவலகம் பொதுமக்களை கோரியுள்ளது.

வெஸ்ட் நைல் வைரஸ் மற்றும் ஈஸ்டர்ன் இக்குவின் என்சிபலிடிஸ் ஆகிய வைரஸ் தொற்றுக்களினால் ஆபத்து ஏற்படும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆகஸ்ட் மாதம் உயிரிழந்த நபரின் மரணத்திற்கான காரணம் நுளம்பு கடியினால் ஏற்பட்ட வைரஸ் தாக்கம் என ஆய்வு கூட பரிசோதனைகள் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

குதிரைகள் போன்ற வேறும் விலங்குகளுக்கும் இந்த நோய் தொற்றுப் பரவும் என தெரிவிக்கப்படுகிறது. எவ்வாறெனினும், இந்த வைரஸ் பரவக்கூடியது அல்ல என தெரிவிக்கப்படுகிறது.

இந்த வைரஸ் மிகவும் ஆபத்தானது எனவும் உயிர் ஆபத்தை ஏற்படுத்தக் கூடியது எனவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நுளம்பு கடியில் இருந்து தம்மை பாதுகாத்துக் கொள்வதன் மூலம் இந்த வைரஸ் தாக்கத்திலிருந்து தப்பிக் கொள்ள முடியும் என அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.



# மாகாண நாடாளுமன்றத்தில் தொடர லிசா மேக்லியோட் விரும்பவில்லை!

ஒன்றாரியோ, செப்ரம்பர் 14

மாகாண நாடாளுமன்றத்தின் நீண்டகால முற்போக்கு கன்சர்வேட்டிவ் உறுப்பினர் லிசா மேக்லியோட் பதவியை தக்கவைக்க விரும்பவில்லை எனத் தெரிவித்துள்ளார்.

லிசா மேக்லியோட் சமூக ஊடகங்களில் ஒரு இடுகையில், அவர் நேபியத்திற்கான நேப்பியன் பகுதிக்கான மாகாண சபை உறுப்பினராக மீண்டும் தேர்தலில் போட்டியிடப் போவதில்லை எனக் குறிப்பிட்டுள்ளார்.

நேபியன்-கார்ல்டனின் ஒட்டாவா-ஏரியா ரைடிங்கை பிரதிநிதித்துவப் படுத்த 2006 ஆம் ஆண்டு முதன்முதலில் தேர்ந்தெடுக்கப்பட்டமை தொடக்கம் அவர்உறுப்பினராக இருந்து வருகிறார்.

எல்லை மாற்றங்கள் பின்னர் 2018 இல் குயின்ஸ் பூங்காவில் நேப்பியனை மட்டுமே பிரதிநிதித்துவப்படுத்த வழிவகுத்தது.

அவரது முற்போக்கு பழமைவாத கட்சி 1999 க்குப் பிறகு முதல் முறையாக ஆட்சிக்கு திரும்பியது.

மேக்லியோட் அமைச்சரவையில் வகித்த பணிகளில் குழந்தைகள், சமூகம் மற்றும் சமூக சேவைகள் அமைச்சு, விளையாட்டு மற்றும் சுற்றுலா அமைச்சு என்பன அடங்கும்.



# காலநிலை பாதுகாப்புக்குப் புதிய திட்டம் புதிய ஜனநாயகக் கட்சி முன்வைக்குமாம்

காலநிலை பாதுகாப்பு குறித்து புதிய திட்டம் ஒன்றை வெளியிடுவார்கள் என்று புதிய ஜனநாயகக் கட்சியின் தலைவர் ஜக்மீட் சிங் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இந்த புதிய திட்டத்தில் கார்பன் வரி தொடர்பிலான யோசனைகள் உள்ளடக்கப்படுமா, இல்லையா என்பது குறித்து நேரடியான தகவல்கள் எதுவும் வெளியிடப்படவில்லை.

காலநிலை மாற்றம் தொடர்பான கொள்கைகளில் லிபரல் மற்றும் கான்சர்வேட்டிவ் கட்சிகள் பின்னடைவை சந்தித்துள்ளன என அவர் தெரிவித்துள்ளார்.

இந்த இரண்டு கட்சிகளினதும் காலநிலை பாதுகாப்பு கொள்கைகள் ஏற்புடையவை அல்ல என அவர் சுட்டிக்காட்டி உள்ளார்.

காலநிலை மாற்றத்திற்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் அதே வேளை, உழைக்கும் மக்களை சுமைகளுக்குள் தள்ளாத திட்டங்களாக அவை இருக்க வேண்டும் என ஜக்மீட் சிங் தெரிவித்துள்ளார்.

அவ்வாறான ஓர் திட்டத்தை வடிவமைத்து வருவதாகவும் அதன் அடிப்படையிலான சட்டமூலம் சமர்ப்பிக்கப்படும் எனவும் ஜாக்மீட் சிங் தெரிவித்துள்ளார்.



# சஸ்கட்ச்வானில் மூவர் படுகொலை

கனடாவின் சஸ்கட்ச்வான் மாகாணத்தின் லொயிட்மினிஸ்டர் பகுதியில் மூன்று பேர் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

லொயிட்மின்ஸ்டர் பகுதியில் இந்தப் படுகொலைச் சம்பவங்கள் இடம் பெற்றுள்ளது.

இந்த கொலைகளுடன் தொடர்புடைய நபர்கள் இதுவரையில் கைது செய்யப்படவில்லை எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

ஆயினும் இந்த சம்பவத்தினால் பொது மக்களுக்கு எவ்வித பாதுகாப்பு அச்சுறுத்தலும் கிடையாது என அறிவிக்கப்பட்டுள்ளது. இது திட்டமிட்டு இலக்கு வைக்கப் பட்டு மேற்கொள்ளப் பட்ட படுகொலைச் சம்பவம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

இந்த முக்கொலை சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் ஆள் அடையாள விவரங்கள் எதுவும் இதுவரையில் வெளியிடப்படவில்லை.

குறித்த பகுதியில் நபர் ஒருவரும் அவரது இரண்டு மகன்களும் வாழ்ந்து வந்தனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

உயிரிழந்தவர்களின் பிரேத பரிசோதனைகள் இரண்டு நாள்களில் நடத்தப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது. சம்பவம் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.



